

MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
NUH National University Hospital
Alexandra Health
Eastern Health Alliance
Jurong Health
SingHealth

SINGHEALTH / PIL / T84R0

நோயாளி தகவல் கையேடு

# பீட்டா-லாக்டம் ஆன்டிபயோடிக் மருந்துகள்

## (BETA-LACTAM ANTIBIOTICS)

அமோக்ஸிசிலின் (Amoxicillin)
பென்சிலின் V (Penicillin V)
அக்மென்டின் (Augmentin)
யுனாசின் (Unasyn)
குளோசாசிலின் (Cloxacillin)
செஃபுராக்ஸைம் (Cefuroxime)
செஃபலெக்ஸின் (Cephalexin)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

இந்த ஆன்டிபயோடிக் மருந்துகள், சுவாசக் குழாய், சிறுநீரக மற்றும் பிறப்புறுப்புக் குழாய், உணவுக் குழாய், தோல் மற்றும் திசு, பித்தநீர்க் குழாய், எலும்பு மற்றும் இடுப்பெலும்பு ஆகியவற்றின் நுண்கிருமித் தொற்றுகளுக்கும், வெட்டை நோய்க்கும், முன் சிறுகுடல் மற்றும் இரைப்பையில் புண்களை உண்டாக்கும் ஹெலிகோபேக்டர் பைலோரி (Helicobacter Pylori) கிருமியை ஒழிப்பதற்கும், நுண்கிருமிகள் தொற்றும் ஆபத்துள்ள நோயாளிகளின் அறுவை சிகிச்சையின்போது அவர்களின் இரத்தம் மற்றும் இருதயத்தில் கிருமிகள் தொற்றுவதைத் தடுப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

நீங்கள் நலமாக ஆரம்பித்தாலும், அல்லது கிருமித்தொற்றின் அறிகுறிகள் நீங்கிவிட்டாலும், கொடுக்கப்படும் ஆன்டிபயோடிக் மருந்துகளை நீங்கள் முடித்துவிட வேண்டும். பாதியிலேயே நிறுத்தினால், தொற்று மீண்டும் பாதிக்கலாம் அல்லது சிகிச்சைக்கு எதிர்ப்பு உருவாகலாம். எனினும், தோல் தடிப்புகள், கண்கள் வீங்குதல் அல்லது மூச்சு விடச் சிரமமாக இருத்தல் போன்றவை இருந்தால், மருந்தை நிறுத்திவிட்டு உடனே மருத்துவரைப் பாருங்கள்.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே எடுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை மருந்தை மட்டும் எடுங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தை உட்கொள்ளாதீர்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

குமட்டல், வாந்தி, வயிற்று வலி மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற பக்க-விளைவுகளை எதிர்பார்க்கலாம். எனினும், தோல் தடிப்புகள், முகம் வீங்குதல், அல்லது மூச்சு விடச் சிரமப்படுதல், காய்ச்சல் அல்லது குளிர் நடுக்கம், அல்லது கை, கால் விரல்கள் மரத்தல், சிலிர்த்தல், அல்லது அவற்றில் ஊசிகுத்தல் உணர்வு ஏற்படுதல் போன்றவை இருந்தால், மருத்துவரிடம் உடனே செல்லுங்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

முன்பு எப்போதாவது உங்களுக்கு பென்சிலின் அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை ஏற்பட்டிருந்தால் அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும்?

மருந்தை ஒரு குளிர்ச்சியான, உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். மருந்தின்மீது ஈரம், வெப்பம் மற்றும் நேரடி வெளிச்சம் படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.